**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 291/2015 மற்றும் 295/15** **நாள். 27.10.2022**

2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ம் நாள் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஏழுமலை | சாதி | |
| கிராமம் | திண்டிவனம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 47 |

**எ..சா.1**

**குறுக்கு விசாரணை**

I. நான் திண்டிவனம் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். T N 07 AR 8873 என்ற டாடா ஏசி வாகனம் எங்கள் அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படவில்லை. அதனால் மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை எடுத்த வரவில்லை. இவ்வழக்கு விபத்தில் சம்பந்தப்பட்ட TN 32 T 9356 என்ற Splender Plus வாகனம்எங்கள் அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் , காப்பீடு ஆய்வின் போது தாக்கல் செய்யவில்லை. மேற்படி வாகனத்தின் பதிவு ஆவணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை. விபத்து 06.07.2015 ம் தேதியில் நடந்துள்ளது. 05.08.2015 அன்று மேற்படி இருசக்கர வாகனம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி **மோட்டார் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் கொடுத்த கடிதம் ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.த.சா.ஆ. 1 / எ.சா.1 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

I. TN 07 AR 8873 என்ற டாடா ஏசி வாகனத்தை ஆய்வு செய்ய கடிதம் எதுவும் எங்கள் அலுவலகத்திற்கு வரவில்லை. அதனால் மேற்படி வாகனம் எங்கள் அலுவலகத்தில் ஆய்வு செய்யவில்லை.

**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 291/15 மற்றும் 295/15** **நாள். 27.10.2022**

2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ம் நாள் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாதன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | அப்பாதுரை | சாதி | |
| கிராமம் | ஏதாநெமிலி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 42 |

**எ..சா.2**

**முதல் விசாரணை**

I. சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. T N 07 AR 8873 என்ற டாடா ஏசி வாகனத்தின் உரிமையாளர் நான் தான். எனக்கு சொந்தமான மேற்படி வாகனம் 06.07.2015 தேதியில் விபத்தில் சம்பந்தப்பட்டதாக வெள்ளிமேடு பேட்டை காவல்நிலைய குற்ற எண். 191/2015 வழக்கிசம்பந்தப்பட்ட விவரம் எனக்கு தெரியும். மேற்படி வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார். வெள்ளிமேடு பேட்டையில் இருந்த ஏதாநெமிலி கிராமத்திற்கு எனக்கு சொந்தமான மேற்படி டாடா ஏசி வாகனத்தை நான் ஓட்டி சென்றேன். அப்போது எதிரே இருசக்கர மோட்டார் வாகனத்தில் மூன்று நபர்கள் வேகமாக வந்தார்கள். அவர்கள் வேகமாக வருவதை பார்த்து நான் வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டேன். அப்போது இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் என் வாகனத்தை உரசுவது போல் வந்து என் வாகனத்திற்கு பின்னால் விழுந்துவிட்டார்கள். இருசக்கர வாகனத்தின் நடுவில் அமர்ந்து இருந்தவர் கல்லின் மீது விழுந்துவிட்டார். பின்னால் அமர்ந்து வந்தவர் நெம்பர் பிளேட்டில் கிழித்து காயம் ஏற்பட்டது. வாகனத்தை ஓட்டி வந்தவர்க்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. அவர் காயம் பட்ட இருவரையும் அங்கேயே விட்டு விட்டு இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டார். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் காயம் பட்டவர்கள் லிப்ட் கேட்டு வந்தார்கள் என்றும், நான் அவசரமாக செல்லவேண்டும் என்று சொல்லி இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு சென்று விட்டார். இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து இருந்தவர் காயம் பட்டவர்க்கு தண்ணீர் கொடுத்தார்.

II. நான் காயம் பட்ட இருவரையும் ஆட்டோ மூலம் வெள்ளிமேடு பேட்டை அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் அங்கியிருந்து திண்டிவம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தேன். அதன் பின்பு போலிசார் என்னை அழைத்தார்கள். நான் போலிசாரிடம் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தான் விபத்திற்கு காரணம் என்று நான் காரணம் இல்லை என்றும் சொன்னேன். போலிசாரிடம் என்னுடைய வாக்குமூலத்தை எழுதிக்கொடுத்தேன். போலிசாரிடம் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை அடையாளம் காண்பித்தேன். அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னுடைய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைக்க போலிசார் கேட்கவில்லை. விபத்து சம்பந்தமாக போலிசார் என்ன மேல்நடவடிக்கை எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அதில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வாகனம் ஸ்ரீராம் இன்சுரன்ஸ் கம்பெனியில் காப்பிடுசெய்யப்பட்டுள்ளது. எனக்கு வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது.

**குறுக்கு விசாரணை**

I. வெள்ளிமேடு பேட்டை காவல்நிலையத்தில் விபத்து சம்மந்தமாக என் வாகனத்தின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. விபத்து சம்பந்தமாக என்னை ஜாமீனில் விடவில்லை. என்னுடைய வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் இருந்தது. விபத்திற்கு என்னுடைய வாகனம் காரணம் இல்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல- விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் என்னுடைய காப்பீட்டுதாரர் மனுதாரர்களுக்கு நஷ்டயீடு அளிக்க வேண்டும் என்றால் சரியல்ல.